1986 நவம்பர் 14]

சேலத்தில் விமான நிலையம்.

10—(*வினா எண் 7295): திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசு, சேலம் விமான நிலையம் அமைக்க அனுமதி அளித்தும் திட்டம் அமுலாக்கப்படாமல் காலதாமதப்படுவது ஏன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இம்மாநில அரசு நெடு நாட்களாகவே சேலத்தில் விமான நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசைக் கோரி வந்துள்ளது. 7–2–1986 தேதியிட்ட இவ்வரசின் கடிதத்தில், சேலத்தில் விமான நிலையம் அமைக்க காமலாபுரம் என்ற கிராமத்தில் 200 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி இலவசமாகத் தர ஒப்புக் கொள்வதாக மத்திய அரசிற்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. விமான தளம் அமைப்பதை உறுதிப் படுத்துமாறும் மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மைய அரசின் பதில் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மிகவும் நன்றி. விமான நிலையப் பணிகள் விரைவில் தொடங்குவதற்கு தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தவும் அதுபற்றிய தொடர்ச்சியான follow-up action எடுக்கவும் மாநில அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த சேலம் விமான நிலையம், அதே போன்று தூத்துக்குடி விமான நிலையம் இவை இரண்டையும் புதிதாக அமைப்பதற்கும் அது மட்டுமல்லாமல், கோவை விமான நிலையத்தை விரிவுபடுத்தவும் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல முறை மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதியிருக்கிறது. நாம், 25–8–1986 ஆம் தேதியன்று கூட, மத்திய அரசு அமைச்சர் இங்கே வந்திருந்தபொழுது நேரடியாகவே இதைப்பற்றி விவாதித்து கடிதம் கொடுத்திருக்கிறோம். அதோடு நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் நானும் அந்த மேடையிலேயே கோரிக்கை வைத்தோம். நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக்

கொண்டிருக்கிறோம். எனவே, மாநில அரசு இதைப் பொறுத்தவரை உடனடியாக அமைப்பதற்கு என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அத்தனை நடவடிக்கை களையும் விரைவாக எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, மத்திய அரசினுடைய பதில் சாதகமாக வருமானால் இந்த வேலை துவக்கப்படும்.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேறு மாவட்டங்களில் விமான நிலையங்களை அமைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்தி ருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் ஏற்கனவே சொன்னேன், தூத்துக்குடி அருகிலே என்று. நீங்கள் சார்ந்திருக்கிற கோவை மாவட்ட விமான நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கையும் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் இதே போல் எத்தனை இடங் களில் விமான நிலையம் அமைப்பதற்குத் தமிழக அரசு கோரி இருக்கிறது? அதே போல், தஞ்சை மாவட்டத்திலும் விமான நிலையம் அமைப்பதாக இதற்கு முன்னர் அறிவிக்கப் பட்டது. தற்போது அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு விமான நிலையம் கோவையிலே இருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. சேலத் தில் அமைக்கப்பட வேண்டும், தூத்துக்குடியில் அமைக்கப்பட வேண்டும், அடுத்து தஞ்சையிலே, இப்படி இந்த 3 இடங் களிலும் அமைக்கப்பட வேண்டுமென்பது அரசினுடைய நோக் கம். அதிலே சேலத்திலும் தூத்துக்குடியிலும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்றும் தஞ்சையிலே தொடர்ந்து எடுக்கப்பட வேண்டுமென்றும் உணர்வு நமக்கு இருக்கிறது. அதை அரசு தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து வலியுறுத்துவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் உறுப் பினர்கள் அனைவரும் அவரவர் இடத்தில் அமரவேண்டும்.

திரு. சா. ஞானசுந்தரம்: தலைர் அவர்களே, தஞ்சையிலே இந்த ஆண்டு அக்டோபர் முதல் 'வாயு தூத்' விமானம் விடுவதற்கு மத்திய அரசு அனுமதித்திருப்பதாகச் செய்திகள் வந்தன. ஆனால் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தேவை யான பெரிய அளவிலான விமான தளம் அங்கே இருக்கிறது

1986 நவம்பர் 14]

என்பதை நான் அமைச்சருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, விரைவிலே விமான சர்வீஸ் துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த நிலைமைகளைக் கருதி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யலாம்.

(முற்பகல் 9-40)

கூட்டுறவு பஞ்சாலைகளில் நிர்வாக போர்டுக்கு தேர்தல்.

11—(*வினா எண் 10493)—திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு பஞ்சாலைகளில் நிர்வாக போர்டுக்கு தேர்தல் நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையில் தேர்தல்கள் நடைபெறுவதற்கான சட்டம் அமுலாக்கப்பட்டபின் தேர்தல்கள் நடைபெறும்.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவரவர்களே, கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் தற்போது நஷ்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருப்பதால் தொழிலாளர்கள், முதலாளிகள், நிபுணர்கள் கொண்ட போர்டை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, ஏற்கனவே அரசு அதிகாரிகளையும், இதர பிரதிநிதிகளையும் கொண்ட குழு இயங்கி வருகிறது. தேவை என்றால் அந்தந்த ஆலையில் நியமிக்கப்பட்டிருக்கிற இயக்குநர் மாற்றம் செய்யப்படுவார்.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவரவர்களே, தற்போது எல்லா மில்களிலும் அந்தந்த ஜில்லா கலெக்டர் சேர்மேனாக இருக்கிறார். இந்த முறையை மாற்றி, முன்பு இருந்த மாதிரி அந்தப் பகுதி எம்.எல்.ஏ. சேர்மேனாக நியமிக்கப்படுவாரா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே அதைப் போன்ற சிந்தனை எதுவும் அரசிடம் இல்லை.